O.S.No. 5/2016

பி.வா.சா.1, திருமதி.நாகவள்ளி
நாள் : 19.06.2025 நேரம் : 03.50 P.M.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

1)எத்தனை சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கு நடைபெறுகிறது என்று எனக்கு தெரியாது . தாவா சொத்தின் சர்வே நம்பர் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வடக்கு பக்கம் காலாங்கரை, கிழக்கு பக்கம் எங்கள் இடமும், தெற்கு பக்கம் கார்மேகம் இடமும், மேற்கு பக்கம் ராமருக்கு பாத்தியமான சொத்து உள்ளது. ராமருக்கு மேற்படி சொத்து கிரையம் மூலமா அல்லது பூர்வீக பாத்தியமா எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் கிழக்கு மாலாக நான் குறிப்பிட்டு சொன்ன சொத்து எங்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தந்தை கிரையம் பெற்ற சொத்து. மேற்படி சொத்தை எனது தந்தை யாரிடம், எப்போது கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது தந்தை 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரைய பாத்தியம் பெற்ற சொத்தாகும். தாவா சொத்திற்கும் கிழக்கு பக்கம் உள்ள சொத்தை எனது தந்தையார் கிரையம் பெற்றதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்தின் கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அது பற்றி எனது கணவருக்கு தான் தெரியும். மேற்படி எனது கணவரை விசாரித்தால் விவரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான்.

விசாரணை முடிவுற்ற நேரம்: 04.00 P.M